**MCOP NO: 551/2024** **DATE: 02.02.2026**

ம.சா : 2

பெயர் : திரு.குமார்

த/பெ : திரு.பாலமுருகன்

வயது : 65

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் விபத்தை நேரில் பார்த்த சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 12 ஐ தாக்கல் செய்கிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வரவில்லை. 1ம் மனுதாரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்பந்தமாக என்னை காவல் நிலையத்திலோ, நீதிமன்றத்திலோ சாட்சியாக விசாரிக்கவில்லை. விபத்து நடந்த சாலையில் அகல் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 15 அடி இருக்கும். விபத்து நடந்த சாலையின் நடுவில் தடுப்பு சுவர் இருந்தது. அந்த சாலை இருவழிச்சாலை என்றால் சரிதான். அந்த சாலை 4 வரிச்சாலை என்று சொன்னால் சரிதான். 4 வரிச்சாலை என்பதால் அதன் அகலம் சுமார் 60 அடி இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் சிக்னல் எதுவும் கிடையாது என்றால் சரிதான். அந்த சாலையில் தடுப்பு சுவர் சிமெண்டால் கட்டப்பட்டுள்ளது. அந்த தடுப்பு சுவர் இடுப்பு அளவிற்கு இருக்கும் என்றால் சரிதான். பொதுவாக மது போதையில் இருப்பவர்கள் சாலையை கடப்பதற்கும், நடப்பதற்கும் தடுமாற்றம் இருக்கும் என்றால் சரிதான். பொதுவாக மது போதையில் இருக்கும் நபர்கள் தடுப்புசுவரில் ஏறி குதித்து செல்வது உண்டு.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு 02.02.2026ல் சாட்சியிடம் கையொப்பம் பெறப்பட்டது.